★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 சித்திரை 26 றஜப் 25 இதழ் 87

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 9—5—83

## "ஐக்கியம் குலைந்தால் அழிவுநமக்குத்தான்; ஆளும் இனத்துக்கு பலன்கிடைக்கும்"

### ஐந்துசந்தி சம்பவம்: 'அமிர்' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

'எமக்குள் பிளவு ஏற்பட்டால், நமக்குள் கருத்து வேற்றுமை உருவாகி ஐக்கியம் குலைந்தால், அழிவு தமிழ் மக்களுக்குத்தான் அரசுக்கும் ஆளும் இனத்துக்கும் தான் இதனால் பலன் உண்டு' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றிரவு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

'இளைஞர்களின் தியாகத்தையும் வீரத்தையும் மதிக்கின்றோம். ஆனால் இவை மட்டும் விடுதலையை நமக்குப் பெற்றுத் தரமாட்டாது. வீரம், தியாகத்துடன், விவேகமும் அனுபவமும் நமக்குத் தேவை' என்றும் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஐந்து சந்திக்கூட்டத்துக்குப் பின்னர் மேற்கண்ட அறிக்கையை திரு. அமிர்தலிங்கம் விடுத்திருந்தார்.

"நாம் நமது இலட்சியத்திலிருந்து இம்மியளவும் பின்போகவில்லை. எமக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், அறிவையும், விவேகத்தையும் கொண்டே தேர்தலை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருகின்றோம். விடுதலை இயக்கத்துக்கு தேர்தல் ஒரு கருவியாக அமையவேண்டும் என்பதே நமது கருத்து" என்று தெரிவித்த அவர்,

"எமக்குள் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோருவதாக இருந்தால் அதனை மக்கள் முன்பாக வைக்கவேண்டும். மக்களின் முடிவை அறிந்து செயல்படவேண்டும். நான்கு துப்பாக்கிகளுக்குப் பயந்து எமது மனச்சாட்சிக்கு விரோதமாக நாம் இயங்குவதாக இருந்தால் அது விவேகமான செயல் என்று எதிர்பார்க்கமுடியாது. இத்தேர்தலில் மக்கள் கூட்டணிக்கு அளிக்கப்போகும் ஆதரவுதான் உலகில் நமது நிலையைத் தெளிவு

(8ம் பக்கம் பார்க்க)

★ நேற்றிரவு வண்ணார்பண்ணை ஐந்துசந்தியில்

# கூட்டணி கூட்டத்தில் துப்பாக்கி வேட்டுகள்!

# மக்கள் கிலிகொண்டு ஓட்டம்!!

PUBLIC LIBRARY JAFFNA

## 'அமிரி'ன் உத்தியோக காரும் கடத்தப்பட்டது

### ஆனாலும் கூட்டம் ஒலி -ஒளி இழந்து தொடர்ந்தும் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை ஐந்து சந்தியில் நேற்றிரவு நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எதிரொலித்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்களினால் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது!

"பொதுமக்களை நாம் ஒன்றும் செய்யப்போவதில்லை. மக்கள் அமைதியாக கலைந்து செல்லலாம்" என்று சத்தமிட்ட துப்பாக்கி இளைஞர்கள் "முப்பதுவருடமாக என்னசெய்தீர்கள்? பத்துவருடமாக நாம் அலைகின்றோம். இந்த நேரத்தில் தேர்தல் தேவையா......?" என்று கேட்டுக்கொண்டே திரு. அமிர்தலிங்கத்தின் உத்தியோக பூர்வமான காரை கடத்திச்சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டு மக்கள் கிலி கொண்டு நாலா பக்கமும் சிதறி ஓடிய போதிலும் பொதுமக்கள் எவருமில்லாத நிலையில் திரு. அமிர்தலிங்கம் ஓரிருவருடன் மேடையில் தொடர்ந்திருந்தார். சம்பவம் நடந்த ஐந்து நிமிடத்தில் திரு. அமிர்தலிங்கம் மேடையிலிருந்து விடுத்த அழைப்பை ஏற்று ஓரளவு மக்கள் அங்கு கூடினர். அதனைத்தொடர்ந்து கூட்டம் தொடர்ந்து நடைபெற்று இரவு எட்டு மணி முப்பது நிமிடமளவில் முடிந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றிரவு ஏழு மணியளவில் வண்ணார்பண்ணை ஐந்து சந்தியில் நடைபெற்றது.

கூட்டத்தில் சட்டத்தரணி இமாம் பேசிக்கொண்டிருந்த போது சுமார் எட்டு மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கூட்டம் நடைபெற்ற கிழக்குத் திசையிலிருந்து எழுந்ததாகப் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

'மக்கள் அமைதியாகக் கலைந்து செல்லலாம். பொது மக்களை நாம் ஒன்றும் செய்யப் போவதில்லை... என்று கூறிக்கொண்டு துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதும் பொது மக்கள் கிலிகொண்டு ஓடினார்கள்.

மின்'வயர்' அறுக்கப்பட்டு மின்விளக்குகள் அணைக்கப்பட்டன. ஒலிபெருக்கி வசதியும் துண்டிக்கப்பட்டது.

மேடைக்கு முன்பாக குழுமி இருந்த பொதுமக்கள் எவருமே இல்லாத நிலையில் திரு. அ. அமிர்தலிங்கமும் ஓரிருவரும் மட்டும் மேடையில் இருந்தனர்.

வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்ட அதே நேரத்தில் திரு. அமிர்தலிங்கத்தின் கார் மின்னல் வேகத்தில் கடத்தப்பட்டது.

கார் முன்புறமாகவும் பின் புறமாகவும் அதிவேகமாக திசைதிருப்பப்பட்டதனால் சில சைக்கிள்கள் சேதமடைந்தன. கூட்டத்தில் போடப்பட்டிருந்த சில கதிரைகளும் சேதமடைந்தன.

இச்சம்பவம் சுமார் ஐந்து நிமிடம் நீடித்த போதிலும் கூட்டம் இடையில் குழம்பி பின்னர் தொடர்ந்து நடைபெற்றது திரு. அமிர்தலிங்கம் உரை

(8-ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட கார் மீட்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி இளைஞர்களினால் கடத்தப்பட்ட கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கத்தின் உத்தியோக பூர்வமான கார், நேற்றிரவு கோம்பயன்மணல் மயானத்துக்கு எதிராக அனாதரவான நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

காரின் நான்கு டயர்களும் சேதப்படுத்தப் பட்டிருந்தன. காரின் முன்புறக் கண்ணாடியும் நொருக்கப்பட்டிருந்தது.

பலத்த சேதத்துக்குள்ளான கார், இப்பொழுது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது.

## யாழ். மேல்நீதிமன்றத்தில் மாணவி கமலம் கொலை வழக்கு; இன்று விசாரணை!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு இன்றைய யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் ரியூட்டரி மாணவி கமலத்தை கொலை செய்ததாக ராஜன் அல்லது ராஜ்குமார் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணி ரி. விக்கிரமராசாவின் அனுசரணையுடன் ஆஜராவார். (அ)

## நெல்லியடியில் அமைதி! தீவிரவாத இளைஞர்கள் எச்சரிக்கைசெய்தனராம்

(புலோலி)

நெல்லியடிப்பகுதியில் சில தினங்களாக நிலவிவந்த கோஷ்டிக்கலவரம் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த சில வாலிபர்களின் தலையீட்டினால் முற்றுப்பெற்று விட்டதாம்!

இரு சமூகத்தவர்களுக்கு இடையே இக்கலவரம் மூண்டதைத்தொடர்ந்து நெல்லியடிப்பகுதியில் கடந்த சில தினங்களாகப் பதட்டநிலை தோன்றி இருந்தது.

இக்கலவரத்தின் போது ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானதுடன், மூன்று சைக்கிள்கள் நொருக்கப்பட்டன. ஒரு கடை உடைக்கப்பட்டது வீதிகளில் சென்றவர்கள் கலவரக் கோஷ்டியினரால் மோசமாகத் தாக்கப்பட்டனர். கரவெட்டியிலும் இக்கலவரம் தொடர்பான தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

பாதுகாப்புபடையினர் இப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயன் அளிக்காததால் மோசமான நிலை உருவாகி வந்தது.

கடந்த சனிக்கிழமை மாலை நெல்லியடிப்பகுதியில் திடீரென்று வந்து தம்மை அறிமுகம் செய்த சில வாலிபர்கள் கலவரத்தில் ஈடுபட்டு இருந்த இருசாராரையும் அழைத்துக் கலவரங்களில் ஈடுபடாது ஒற்றுமையாக வாழும்படி எச்சரித்து விட்டுச் சென்றனர். இதனைத்தொடர்ந்து கலவரங்கள் முற்றாக நீங்கி உள்ளதுடன் வழமை போல் நெல்லியடிப் பகுதியில் அமைதி ஏற்பட்டுள்ளது.

கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, சிங்கப்பூர்
ஆகிய இடங்களுக்கு துரிதமாகச் செல்வதற்கான
சகல பிரயாண ஒழுங்குகளுக்கும் - இலவச ஆலோசனைகளுக்கும்
AIR - TRANSIT (TRAVEL CONSULTANTS)
99 — 2/56B, 2-nd Floor, Gaffoor Building, Colombo-1, Phone: 549365
(7173)

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

மிற்சுபிசி டெலிகா T 120 V 1979 மொடல் பதிவு செய்யப்படாதது. உன்னத நிலையில் விற்பனைக்குண்டு. வித்யா மோட்டோர்ஸ், 68, வீரசிங்க வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23255. [7129]

நல்ல நிலையில் உள்ள D3 பேர்கின்ஸ் எஞ்சினும் 26½ அடி வள்ளமும் தனித்தனியே விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. டானியல் அக்கராய் வடக்கு, அல்லாய். 7142

தமிழ், ஆங்கில புதிய பழைய தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி - சங்கர் காட்டுவி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 7011

யாழ்ப்பாணம், மாட்டின் ரோட் ஒழுங்கையில் வீடு கட்ட உகந்த காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: திருச்செல்வம், 123, பிரதான வீதி, யாழ்ப்பாணம். போன்: 22561 [7163]

கண்டி வீதிக்கு அருகாமையில் மட்டுவில் தெற்கில் 3½ பரப்பில் மின்சார வசதியுடன் சிறிய வீடு விற்பனைக்குண்டு. த. சோதி, நுணாவில் சந்தி, சாவகச்சேரி. 7161

மானிப்பாயில் இருந்து ½ மைல் தூரம், சுதுமலை வடக்கில் 2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 7158, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 7158

மர அரிவு ஆலை முழுமையாக விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 7169, மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். 7169

## தேவை

அப்பிகாசக் கொப்பி, மொனிற்றேஸ் கொப்பி லெட்ஜர் கட்டுவதில் அனுபவமுள்ளவர்களும் தொழில் பழக விரும்புவர்களும் உடனடியாக தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 7149 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், 7149

அரைக்கும் இயந்திரத்தில் (கிறைண்டரில்) வேலை செய்வதற்கு முன் அனுபவமுள்ள நல்லொழுக்கமுள்ள, விவசாகம் செய்த, ஆண்கள் தேவை. முன் வேலை செய்த ஸ்தாபனத்தில் வழங்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 40 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பப்படுவர். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 191 [53], காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7130

அசோக் லேலன் LD வாகன வேலை செய்வதில் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்கும் உதவியாளர்களும் தேவை. நேரில் வரவும். உரிமையாளர்: பிங்லோயர் ஸ்ரோஸ், 81, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 7157

## தேவை

யாழ். கே. கே. எஸ். வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய கடையில் றெக்கோடிங் பார் போடக்கூடியவர்கள் தேவை. தொடர்பு— மலிரி சேவிஸஸ் த டன்லப் ஸ்ரோஸ், 234 [446], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7170

## வகுப்புகள்

City & Guilds 83 Part I & II மீட்டல் வகுப்புகள் 10th to 30th May. கடந்த 5 வருட வினாக்களுக்கு விடை விளக்கப்படும். இம்பீரியல் இன்ஸ்ரிரியூட், கே. கே. எஸ், வீதி, தெல்லிப்பழை. 7154

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடி சந்திக்கருகாமையில் கடைக்கு அல்லது ஸ்ரோஸ்க்கு கட்டிடம் உடன் வாடகைக்கு உண்டு. 25 கிலவ்பண்ணை ரோட் யாழ்ப்பாணம். 7150

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## அரசபதவியிலிருந்து வெளியேறினர்

(யாழ்ப்பாணம்)

ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளரான மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த திரு. எம். சபாபதிப்பிள்ளை, அரசியலில் இருந்து, அரசாங்க பதவியிலிருந்தும் விலகிக்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

இவர் கடந்த யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத்தேர்தலில், ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர்களில் ஒருவராகப் போட்டியிட்டவர்.

யாழ் நகரில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற வன்முறைச்சம்பவங்களைத் தொடர்ந்து, அரசியலில் இருந்து தாம் முற்றுமுழுதாக விலகிக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (மா)

## இன்று பரிசளிப்பு

[யாழ்ப்பாணம்]

நவாலி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திரு. த. மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் கௌரவ விருந்தினராக மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சிறப்புவிருந்தினராக மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சியன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [சூ]

# கத்திவெட்டுக்குப் பலி! குருநகரில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

பழைய பகைமை காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் கத்திவெட்டுச் இலக்காகி ஸ்தலத்திலேயே மரணமானார்.

குருநகர் திட்டியைச் சேர்ந்த செ. ஆசைமணி (32 வயது) என்பவரே கத்திவெட்டுக்குப் பலியானவராவார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் நடைபெற்றது.

வீட்டில் இருந்த இவரை நான்கு நண்பர்கள் அழைத்துச் சென்றே கத்தியால் வெட்டிக்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலைச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

# மின்சாரத்தினுல் தாக்கப்பட்ட இருவர் ஆஸ்பத்திரியில்!

(யாழ்ப்பாணம்)

கட்டிடவேலை செய்து கொண்டிருந்த இருவர் நேற்றுப்பகல் திடீரென மின்சார அதிர்ச்சி ஏற்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ரவீந்திரகுமார் [20 வயது] சிறீஸ்கந்தராசா [30 வயது] ஆகிய இருவருமே மின்சாரத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

ரவீந்திரகுமார் என்பவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக ஆஸ்பத்திரிவட்டாரங்கள் தெரிவித்தன.

இருபாலையில் வசிக்கும் இருவரும் தனியார் கட்டிட வேலையின் போது வெல்டிங் செய்து கொண்டிருக்கும் பொழுதே மின்சாரத்தால் தாக்குண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (மா)

## இரத்தினசிங்கத்தின் முள்ளந்தண்டு எலும்பிலுள்ள குண்டை நீக்குவது ஆபத்தாம்

(புலோலி)

பருத்தித்துறை நகரசபை ஐக்கியதேசியக்கட்சி முதலாவது வேட்பாளர் திரு. கே வி. இரத்தினசிங்கம் இனந்தெரியாத இளைஞர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட போது காயமடைந்து வீதியால் சென்றுகொண்டிருந்தவரான கரவெட்டியைச்சேர்ந்த முருகேசு பரராசசிங்கம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இவரின் முள்ளந்தண்டு எலும்பிலுள்ள துப்பாக்கிக் குண்டை எடுப்பது ஆபத்தானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்குண்டை எடுக்காது விடலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. குழாய் மூலமே சிறுநீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. இவர் தற்போது சற்றுகுணமடைந்துவருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் திருமணம் செய்து ஒரு வருடமென்பதும் தற்போது பிள்ளையொன்று பிறந்து சில நாட்கள்தான் ஆகின்றன வென்பதும், நல்லெண்ணெய் வாங்குவதற்கெனச் சென்ற போது இவர் துப்பாக்கிச்சூட்டுக்கிலக்கானார் என்பதும்குறிப்பிடத்தக்கது. (வ)

## இலக்கண சுவாமிகள் குருபூஜை

(யாழ்ப்பாணம்)

இலக்கண சுவாமிகள் குருபூசை நேற்றுமுன்தினம் "ஈழநாடு" அலுவலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இலக்கணச்சுவாமிகளின் சின்னங்களும் குருபூசையின் போது வைக்கப்பட்டிருந்தன.

சுவாமிகளின் உறவினர்களும், ஈழநாடு அலுவலக ஊழியர்களும் இப் பூஜையில் கலந்து கொண்டனர். [மா]


ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னுகம்

தரம் II விஞ்ஞானம், கலை, வர்த்தக வகுப்புகளில்
சில வெற்றிடங்கள் உண்டு.
விடுதி வசதியும் உண்டு.
தகுதியுடையோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

9-5-83. (7152)

கூடிய சம்பளத்துடன்
பிறநாட்டு வேலைவாய்ப்புக்கள்

சவூதி அரேபியாவில்
1. தச்சுத்தொழிலாளர் (Shuttering)
2. கம்பி வளைப்போர் (Bar Benders)

மோகாவில் (Quatar)
1. மேசன் (Tile Fixers)
2. மை பூசுபவர் (Painter)

உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளவும்.

சு. ஸ்ரீபாஸ்கரன்,
தலைவர்,
மகிலாசகம் கிராம அபிவிருத்திச் சங்கம்.

Labour Licence No: 292 [7167]

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னுகம்
பாடசாலையிலிருந்து விலகியோர்க்கான
தொழில் நுட்ப நெறி

1. உடை செய்தல்
2. மோட்டார் பொறியியல்
3. மின் இணைப்பு

மேற்படி துறைகளுக்கு
தகுதியுடைய போதனாசிரியர்களிடமிருந்தும்
பயில விரும்பும் மாணவர்களிடமிருந்தும்
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் தேதி - 20-5-83

அதிபர்.

9-05-83. (7156)



## ஓராண்டு நினைவாஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

(அருளப்பர்: 10:25)

### பிலிப் ஜீவரட்ணம்

தோற்றம்: 06-05-1952 மறைவு: 09-05-1982



எங்கள் அன்புத் தெய்வமே எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திச் சென்று ஓராண்டோடி மறைந்தாலும் உன் மேல் உள்ள அன்பு பாசம் எங்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும்.

ஆண்டுத்திவச நாளாகிய (09-05-83) திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். ஆசனக்கோவிலில் நடைபெறும். பூசைப்பலியில் பங்கு பற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஒப்புக்கொடுக்குமாறு வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மைத்துனிமார், உறவினர்கள்.

54/14, ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம். (7168)

# லெபனனிலிருந்து சிரியா துருப்புக்களை வெளியேற்றுவது சாத்தியமில்லை!

## ஷுல்ஸ்-அசாத் பேச்சுக்களில் தடை!

பெய்ரூட், மே. 8

லெபனனிலிருந்து சிரியப் படைகளை வெளியேற்றச் செய்யும் பேச்சுக்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் சிரியப் படைகளை உடனடியாக லெபனனிலிருந்து வெளியேற்றும் அமெரிக்கத் திட்டம் தோல்வி கண்டுள்ளதெனத் தெரியவருகின்றது.

அமெரிக்கவெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ஸ் சிரிய அதிபர் திரு. அஸாத்துடன் பெய்ரூட்டிலிருந்தும் சிரியத் துருப்புக்களை வெளியேற்றுவதுகுறித்துப்பேசினார். ஆனால் சிரிய அதிபர் இப்பேச்சுக்களில் அதிக அக்கறை காட்டவில்லை. இதனால் சிரியப்படைகள் அமெரிக்காவின் சமாதானத் திட்டத்துக்கமைய உடனடியாக லெபனனிலிருந்துவெளியேறும் சாத்தியமில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கவெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ஸ் இப்பேச்சுக்கள் பற்றிக் குறிப்பிடுகையில், ''சிரியஅதிபர் அஸாத் சிரியத் துருப்புக்களின் வெளியேற்றம் குறித்து அதிக அக்கறை காட்டவில்லை. இதனால் இஸ்ரேலின் கோரிக்கைக்கேற்ப ஏககாலத்தில் பாலஸ்தீன, சிரியத் துருப்புக்களை லெபனனிலிருந்து வெளியேற்றுவது அசாத்தியம்'' என்று தெரிவித்தார்.

திரு. ஷுல்ஸ் இஸ்ரேல்தரப்பில் பேச்சுக்களை நடத்திய போது, பாலஸ்தீன, சிரியப் படைகள் ஏககாலத்தில் லெபனனிலிருந்துவெளியேறும் பட்சத்தில் தனது துருப்புக்களை திருப்பியழைக்க இஸ்ரேல் கொள்கையளவில் இணங்கியிருந்தது. தற்போதுசிரிய தரப்பில் இணக்கம் காணப்படாததால் இஸ்ரேலிய துருப்புகளும் லெபனனிலிருந்து வெளியேற முன்வரமாட்டாதென்றேஎதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவின் மேற்காசிய சமாதானத் திட்டத்தில், லெபனனிலிருந்து இஸ்ரேலிய, சிரிய, பாலஸ்தீன துருப்புக்களை வெளியேற்றிய பின்னர் ஏனைய அந்நியத் துருப்புக்களையும் வெளியேற்றி அங்கு பூரண அமைதி நிலைச் செய்வதே முக்கிய நோக்கமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

## 'பட்மின்டன்' உலகக் கிண்ண வெற்றி

புதுடில்லி மே. 8.

'பட்மின்டன்' உலகக்கோப்பையை இந்தோனேஷிய வீரர் ஒருவர் பெற்றுள்ளார். இந்த உலகக் கிண்ண இறுதிப்பந்தயம் சொப்பன் ஹெகனில் நடைபெற்றது.

இந்திய வீரர் பிரகாஷ் படுகோனேயை உலக சாம்பியனான இந்தோனேஷிய வீரர் தோற்கடித்தார். படுகோனே 15-9, 7-15, 1-15 என்ற ரீதியில் தோல்வியடைந்தார். (இ)

## மேற்குலகின்பொருளாதாரநெருக்கடி:

# வளர்முகநாடுகளைப் பெரிதும் பாதித்துள்ளது

## ''எஸ்காப்'' அறிக்கை

பாங்கொக், மே, 8

''கடந்த ஐம்பதாண்டுகளில் மிகமோசமான பொருளாதார ஸ்தம்பித நிலைமையை மேற்குலகம் அடைந்துள்ளது. இது ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தைப் பெருமளவு பாதிக்கின்றது'' என்று ஆசியா, பசிபிக்குக்கான ஐ. நா. வின் பொருளாதார, சமூகக் கமிஷன் (எஸ்காப்) வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இன்று மேற்குலக வல்லரசுகளை இறுக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளின் பின்விளைவுகள் ஆசியாவின் சகல நாடுகளையுமே பெருமளவு பாதித்துள்ளது. இவற்றின் வெளிநாட்டு வர்த்தகச்சமநிலை சீர்குலைந்து பற்றாக்குறை அதிகரித்துவருகிறது. வேலையற்றோர் தொகை உயர்ந்து வருகிறது. ஜனத்தொகை அதிகரிப்பு உணவுற்பத்தியைவிட உயர்ந்துள்ளது'' என்றும் 'எஸ்காப்'பின் அறிக்கை தெரிவிக்கிறது.

''மேற்குலகு நாடுகள் பின்பற்றும் பொருளாதார தற்காப்புக் கொள்கை வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்'' என்று 'எஸ்காப்'பின் உயர் செயலாளர் திரு. கிப்ரியா சுட்டிக் காட்டியுள்ளார்.

''மேற்குலக'' நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளே ஏழை நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளன'' என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆப்கானிலிருந்து

# சோவியத் துருப்புகள் வாபஸ்பெறும் அறிகுறி!

இஸ்லாமாபாத், மே, 8

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புக்கள் விரைவில் திருப்பி அழைக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் யக்குபான் தெரிவித்திருக்கின்றார்.

துருக்கிய பத்திரிகை யொன்றுக்கும் பேட்டியளிக்கையிலேயே பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

சோவியத் வெளிவிவகார அமைச்சர் குரோமிக்கோவுடனும் மற்றும் அதிகாரிகளுடனும் தான் தொடர்புகொண்ட போது அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களிலிருந்து இக்கருத்தினை வெளியிடுவதாக அவர் அந்தத் துருக்கிய பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தான் அகதிகள் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் சமரசம் ஒன்று விரைவில் ஏற்படலாம் என்று இந்தியத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது. (சூ)

## சீனவிமானம் கடத்தல்:

# தென் கொரிய-சீன அதிகாரிகள் பேச்சு!

சியோல், மே. 8

கடந்த வியாழக்கிழமை சீன விமானமொன்றைக் கடத்திச் சென்றவர்கள் தென்கொரியாவிலுள்ள அமெரிக்க இராணுவத் தளமொன்றில் சரணடைந்துள்ளனர்.

இச்சரணடைந்த ஆறு கடத்தல்காரரையும் மீண்டும் சீனாவுக்குக் கொண்டுவருவது பற்றி சீன, தென்கொரிய அரசுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. இந்நேரடிப் பேச்சுக்கள் 40 நிமிடங்கள் வரை நீடித்தன.

சீனாவுக்கும், தென்கொரியாவுக்குமிடையே நிகழ்ந்த இப் பேச்சுவார்த்தை அதிமுக்கியம் வாய்ந்ததாகும். ஏனெனில் 1950-53 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் சீன, தென்கொரிய அதிகாரிகள் பேச்சுவார்த்தை யொன்றில் பங்குபற்றியது இதுவே முதல்தடவையாகும்.

இப்பேச்சுக்களின் விளைவுகள் குறித்து எதுவும் தெரிவிக்கப் படவில்லை. ஆயினும் தொடர்ந்து இக்கடத்தல்காரர் விவகாரம் தொடர்பாகப் பேச இந்த இரு நாடுகளும் இணங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

## பொற்கோயிலில் கொலையுண்ட

# டி.ஐ.ஜி. அத்வாலுக்கு ஜனாதிபதி பரிசு!

## பிரதமர் இந்திரா சிபார்சு

புதுடில்லி, மே, 8

அமிர்தஸரஸ் பொற்கோயிலில் கொலைசெய்யப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அத்வாலுக்கு சிறந்த பொலிஸ் சேவைக்கான ஜனாதிபதி விருதைப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சிபாரிசு செய்துள்ளார்.

திரு. அத்வாலின் மரணம் சம்பந்தமாக அவரது குடும்பத்தாரால் நடத்தப்பட்ட சடங்கொன்றிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. பிரதமர் திருமதி காந்தி தமது பிரதிநிதியொருவர் மூலமாக அத்வாலின் புதல்வருக்குத் தலைப்பாகை ஒன்றையும் பரிசாக வழங்கினார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அத்வால் அமிர்தஸரஸ் 'பொற்கோயிலில்' சீக்கிய தீவிரவாதி ஒருவரால் இரு வாரங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே. தற்போது பொலிசார் அப் பொற்கோயிலில் ஒளிந்திருக்கும் கொலையாளியைக் கண்டு பிடிக்கத் திட்டம் வகுத்துவருகின்றனர். இதேவேளை பொலிசாருக்கு முகம்கொடுக்கவென பொற்கோயிலினுள் தீவிரவாதிகள் கடும் போர்ப் பயிற்சி மேற்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# கைதிகளுக்கு மன்னிப்பு:

## ஆப்கான் அரசு நடவடிக்கை

காபூல், மே 8

ஏப்ரல் புரட்சியின் 5வது ஆண்டுநிறைவை ஒட்டி ஆப்கான் அரசாங்கம், பல கைதிகளுக்கு மன்னிப்பளித்து விடுதலை அழித்துள்ளதுடன் பலருக்கு சிறைத்தண்டனையைக் குறைத்தும் உள்ளது.

இதே நேரத்தில் வெளிநாடுகளிலிருந்து ஆப்கானுக்கெதிரான பிரசாரங்களில் ஈடுபட்டிருப்போரும், எதிர்ப்புரட்சிச் சக்திகளுடன் சேர்ந்து போராடுவோரும் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டு அரசாங்கத்துடன் வந்து சேருமாறும் ஆப்கான் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாண்டு ஏப்ரல் 27 முதல் ஜூலை 10 வரை. தமது ஆயுதங்களை கீழே போட்டு எதிர்ப்பைக் கைவிட்டவர்களுக்கெதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாதென்றும், அவர்களது அமைதியான வாழ்வுக்கு உதவிகளை வழங்கும் என்றும் காபூல் ஆப்கான் அரசு அறிவித்துள்ளது

காபுல் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அதன் நல்லெண்ணம், மனிதாபிமானம் ஆகியவற்றின் இன்னோர் வெளிப்பாடு என்று கூறப்படுகிறது.

ஆப்கான் அரசாங்கத்தின் மனிதநேய கொள்கை, பல நல்ல பலன்களைத் தந்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் தமது குற்ற நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டு, அரசாங்கத்துடன் ஒத்துழைக்க ஆரம்பித்துள்ளனர்.

# அமெரிக்க-சீன உறவில் பாதிப்பு?

வாஷிங்டன், மே, 8

அமெரிக்கா 80 கோடி டொலர் பெறுமதியான நவீன ரக யுத்த ஆயுதங்களை தாய்வானுக்கு விற்பனை செய்யவுள்ளது. இந்த ஆயுதங்கள் ஒரே தடவையிலேயே விற்பனைசெய்யப்படவுள்ளன.

அமெரிக்கா ஒரே தடவையில் இவ்வளவு கூடுதலான யுத்த ஆயுதங்களைத் தாய்வானுக்கு விற்பனை செய்வது இதுவே முதல் தடவையாகும்.

றீகன் நிர்வாகம் எடுத்திருக்கும் இந்த நடவடிக்கை சீனாவின் பெரும் எதிர்ப்பை உருவாக்கும் என்றும், இதனால் இருதரப்பினரின் உறவுகளில் மேலும் முட்டுக்கட்டைகள் தோன்ற இடமுண்டு என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தாய்வானுக்கு அமெரிக்கா வழங்கிவரும் ஆதரவினாலேயே அமெரிக்க - சீன உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# ''அமெரிக்கா விட்டுக் கொடுத்து நடக்கவேண்டும்!''

## யூரி அந்ரபோவ்

மாஸ்கோ, மே, 8

''ஐரோப்பாவில் எம்-எக்ஸ் நடுத்தர ஏவுகணைகளை நிறுவுவதனை மட்டுப்படுத்துவது குறித்து ஜெனீவாவில் சோவியத்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே நடைபெறும் பேச்சுக்களில் அமெரிக்கா விட்டுக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று சோவியத் அதிபர் திரு. யூரி அந்ரபோவ் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஜெர்மன் அதிபர் திரு எரிக் ஹோனேகர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ளார். இவ்விஜயத்தை முன்னிட்டு கிழக்கு ஜெர்மன் அதிபருடன் கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், அமெரிக்கா தன்னிச்சையாக எம்-எக்ஸ் நடுத்தர ஏவுகணைகளை நிறுவுவது குறித்து நடந்து கொண்டால் தாம் பதில் நடவடிக்கைகளில் இறங்க நேரிடும் என்றும் இந்த இரு தலைவர்களும் எச்சரித்துள்ளனர். (இ)

# ஆயுள்வேத மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

(சுழிபுரம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை சுழிபுரம் உப அலுவலகம் நடாத்தும் ஆயுள்வேத வைத்தியசாலையில் சகல வகையான மருந்துவகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் தினமும் நோயா (7ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

காலுக்குச் செருப்பில்லையென்று கவலை கொண்டி ருக்கும்போது காலே இல்லாத மனிதனைக் கண்டேன்.

— சீன ஞானி கொன்பூசியஸ்

## நமது நோக்கு

# சிந்தனைத் தெளிவு என்றுமே சிறந்தது

''பயங்கரவாதச் செயல்களை இராணுவத்தின் மூலம் ஒருநொடியில் அடக்கி விட முடியும்; அப்படிச் செய்ய முற்பட்டால் ஒன்றும் புரியாத அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்கானோர் செத்துமடிவார்கள்; இதனை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்'' என்று நாட்டின் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அண்மையில் ஒரு கூட்டத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அப்பாவி மக்கள் இவ்வளவு பேரிலும் நாம் அவர் கொடுத்த வாக்குறுதிக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

வடபகுதியில் வாழும் அப்பாவி மக்கள் கடந்த சில வருடங்களாகப்படுகிறபேரின் னல்களுக்கு என்று விடிவு காண்போமென்று விசனப் படுகின்றனர். இராணுவ ஆட்சியின் கொடுமை இனக் கலவரத்தைத் தொடர்ந்து வேரூன்றுகின்றது.

இளைஞர்களின் துப்பாக்கித்துடுக்கை அடக்கஇராணுவத்தை அனுப்பிய காலந் தொட்டு இப்பகுதியில் நிலவும் அமைதியின்மையும், பரபரப்பும் சொற்களால் வர்ணிக்கப்படக்கூடியவை யன்று. தவிர்க்கமுடியாதவைத் தாங்கும் வல்லமையும் இப்பகுதி மக்களுக்குத் தாராளமாகவுண்டு.

தேர்தல் (எதுவென்றுலென்ன) கிட்டுவதும் 1981 சம்பவங்கள் நினைவுக்குவருவது இயல்பு. இராணுவ அதிகாரிப்பு விளைவிக்கக்கூடிய அனர்த்தங்கள் சொல்லாமலே புரியும்.

இந்தப் பதற்ற நிலையில் நாட்டின் பிரதமர் 'பயங்கரவாதத்தை' ஒரு நொடியில் அடக்கிவிடமுடியுமென்றும், 'தெய்வமே துணை! வேறு யாருமில்லை'யென்று கலங்கிய மக்களுக்கு 'ஆனால் அது ஒருபோதுமே நடவாது' என்றும், அதனைவிடத் தேற்றம் வேறென்ன உண்டு?

பிரதமர் சொல்வதற்கும் ஜனாதிபதி சிந்திப்பதற்கும் வேறுபாடிருக்க முடியாது! இருந்தும் 'ஓர் ஜனநாயக ஆட்சியில் நாட்டின் தலைவர்கள் எவ்வித அதிகாரமிருந்தபோதும் இவ்வித பாரதூரமான திடீர் நடவடிக்கை எடுக்கமுடியுமா?'' என்ற கேள்வி எழத்தான் செய்யும்.

அதற்கு விடையளிப்பது இலகுவானதல்ல; ஜனநாயகம் என்ற பதத்திற்கு எத்தனை கருத்துக்கள்! அந்தக் கோட்பாட்டுக்கு மனிதனைப்போல எத்தனை பருவங்கள்.

ஜனநாயகத்தின் பெயரில் மக்கள் ஆதரவுடன் சர்வாதிகார ஆட்சி நடந்து நடக்கும் நாடுகள் எத்தனை? இங்கு அந்த நிலை வர முடியாதென்று எவ்வாறு அடித்துக்கூற முடியும்?

எனவே ஜனநாயக ஆட்சியிலும் ராணுவ பலத்தினால் மக்கள் எதிர்ப்பைமறைமுகமாக அடக்கலாமென்பது வெளிப்படுகிறது. பயங்கரவாதம் ஒருபுறத்திலிருக்கட்டும்.

விடயத்துக்கு நேரில் வருவோம். வடபகுதியில் நடைபெறுவதைப் பயங்கரவாதமென்பதால், அதனைஒழிக்க ராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறது. 'பயங்கரவாதிகளை' இனங்கண்டு அந்த நோக்கத்தை ராணுவம் நிறைவேற்றட்டும்; அந்த முயற்சியில் அப்பாவிகள் அகப்பட்டு அல்லற்படுவது எவ்விதத்திலும் தவிர்க்கப் படவேண்டியது அரசின் பெரும்பொறுப்பு.

'பயங்கரவாதத்தை' ஒழிக்க இப்பகுதிமக்கள் எவ்வாறு ஒத்துழைக்க முடியுமென்பது அரசுக்குப்புரியாத விடயமல்ல; ஆளும் கட்சியின் வேட்பாளர்கள் கொல்லப்பட்டதும் 'பயங்கரவாதம்' மறுதலிப்பதும், நாளாந்தம் ஐ.தே. கட்சி வேட்பாளர் பலர் தேர்தலிலிருந்து விலகிவருவதும் எதனைக் குறிக்கின்றது? விடைமிகத்தெளிவு.

இங்குள்ள மக்கள் மத்தியில் ஆளுங்கட்சிக்கு ஆதரவில்லை. தமிழ்மக்கள் அனைவருமே விடுதலை கோரி நிற்கின்றனர்; அதனைவேண்டாமென்று எவரும் இதுவரை சொல்லவில்லை. இங்குள்ள கட்சிவேறுபாடுகள் இதற்கு மாறுபட்டவையல்ல.

அந்த விடுதலை என்ன உருவத்தில் அமையவேண்டுமென்பது பற்றி வேறுபாடுகளிருக்கலாம்.

விடுதலை கோரும் மக்கள் விடுதலையை மறுக்கும் அரசை எவ்வாறு ஆதரிப்பார்கள்? அரசை ஆதரித்து தமிழ்ப் பகுதிகளை அபிவிருத்தி செய்யலாமென்று எண்ணும்அரசியல் பேர்விகள் அரசுடன் சேர்ந்தால், அதிகாரம், சுகபோகம் கிடைக்குமென்று கனவு காணும் அரசியல் பதர்கள் விடுதலையென்ற பெருநோக்கத்தை உதாசீனம் செய்பவர்களே!

நோக்கம் வேறுபட்டாலும் இலக்கை விட்டு விலகியவர் என்ற காரணத்தால், அவர்களின் ஆதரவு அரசுக்கு என்றுமே பலமளிக்க மாட்டாது; இதனை உணரும் காலம் கிட்டிவருகிறது.

ஒன்றுபட்ட மக்களை எவ்வாறு பிரிக்க எத்தனித்தாலும், இந்த உயர்ந்த லட்சியத்தைத் தடைப்படுத்த எவ்வித அரசியல்தந்திரமும் நிரந்தர உதவியளிக்காது. இது வரலாறு கண்ட உண்மை. தமிழ்மக்கள் மத்தியில் நிலவும் 'சட்டி'ப் போட்டிகள் 'விடுதலை' என்றதும் எடுக்கும் ஓட்டம்.

இங்கு வாழும் பொதுமக்கள் அஞ்சுவது அரச பயங்கரவாதத்தையே! ராணுவ வெடுபிடி இந்தப்பிரச்சினையை தீர்த்து வைக்க மாட்டாது என்று ஒப்புக் கொள்ளும் பிரதமர், நேரான நிதானமான வழியை மேற்கொள்வதற்கென்ன தயக்கம்?

வடபகுதிவன்செயல்கள், குழப்பங்கள் தீர ஆட்சியாளர் அரசியல் நடவடிக்கைகளில் தயக்கமின்றி இறங்குவதே சாலச் சிறந்தது.

''10 லட்சம் வீடுகள் திட்டம் வெற்றிபெற

# ஏழைகள் வீடுதேடிக் கடன் பணம் செல்லவேண்டும்''

## ஊர்காவற்றுறைக் கருத்தரங்கில் பண்டிதர் இரத்தினம் எம். பி.

(வண்ணார்பண்ணை)

''பத்து லட்சம் வீடுகளை அமைக்கும் பிரதமரது புதிய திட்டம் வறிய மக்களுக்குப் புதுவிதமான ஒரு கடன் திட்டமாகவே அமைந்துள்ளது. இந்தக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் பத்துலட்சம் வீடுகள் சாத்தியமாகுமா என்ற சந்தேகமும் எழுகின்றது. தமது அமைச்சுக்களின் கீழ் இயங்கும் சகல அலுவலகங்களையும் இத் திட்டத்திற்குப் பயன்படுத்தி இதைச் செயல்படுத்தப் பிரதமர் முயன்றுள்ளதைக் காண முடிகின்றது. ஏழை மக்களை அலுவலகங்களுக்கு அலைந்து, அவர்கள் அலைந்து திரிந்து செலவுசெய்ய வைக்காமல் மக்களின் வீடுகளுக்குக் கொண்டு சென்று இக்கடன்களை வழங்குவதே மிகவும் பொருத்தமானதாகும்.''

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வீடமைப்புத் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நாட்டில் பத்து லட்சம் வீடுகளை அமைப்பது தொடர்பாகத் தொகுதிகள் தோறும் நடத்தப்பட்டுவரும் கருத்தரங்குகளின் தொடரில் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கான கருத்தரங்கு வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடந்தது.

யாழ். மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திரு. என். சிவதாசன் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. பாலரத்தினம் ஆரம்பித்துவைத்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், கட்டிடத் திணைக்கள உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

''பத்து லட்சம் வீடுகளை அமைக்கும் இக்கடன் திட்டத்தில் மூன்றுவிதமான திட்டங்கள் அடங்குகின்றன. புதிய வீடு கட்டுதல், சிறிய குடிசைகளை வீடாக மாற்றுதல், கிணறுகள் அமைத்தல் என்பன. இதன்படி வீட்டில் அமைக்கப்படும் கிணறும் பத்து லட்சம் வீடுகளில் அடங்குகின்றது.

''கிராமங்களிலுள்ள வறியவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்குச் சிறிய கடன் வழங்கிப் பத்து லட்சம் வீடுகளை உருவாக்குவதே இத்திட்டம். இது எந்த அளவுக்குச் சாத்தியப்படுமென்று கூறமுடியாமல் இருக்கிறது. ஆக்கக்கூடிய கடனுதவி ஏழாயிரத்து ஐநூறு ரூபா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடனில் இன்றைய வாழ்க்கைச் செலவிலும் பொருட் செலவிலும் ஒரு ஏழை எப்படி ஒரு வீட்டை அமைப்பது என்ற கேள்வி எழுகின்றது.

''கடந்த காலங்களில் வீடமைப்புக் கடன் பெறச் சென்றவர்கள்பட்ட கஷ்டங்களை, துன்பங்களை நாம் அறிவோம். நாலாயிரம் ரூபா கடன் பெற விண்ணப்பித்த ஒருவர் ஆயிரம் ரூபாவுக்குமேல் செலவு செய்யும் நிலையிருந்தது. இந்தநிலை இக்கடனுக்கும் இருந்தால் பத்து வீடுகள்கூட உருவாக முடியாது. எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் இந்த அரசு ஏழைகளுக்குரிய அரசாகக் காண முடியவில்லை.

''இத்திட்டத்தைச் செயல்படவைக்கவேண்டுமாயின், இக்கடனைப்பெற மக்களுக்கு எந்த வித சிரமமுமேற்படக்கூடாது. வீடுதேடி இக்கடன் கொடுக்கப்படவேண்டும். அந்த வீடுகளை அமைப்பதற்கு வீடுதோறும் சென்று உரிய திட்டமும், ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும். இத்திட்டம் மக்களின் முழுமையான சுயமுயற்சியின் மூலமே வெற்றிபெற முடியும். இதற்கு இக்கடன் சிரமமின்றி உரிய வசதிகளுடன் கொடுக்கப்பட வேண்டும்''. அ

### யாழ். மத்திய கல்லூரி லியோகழகம்

எமது கல்லூரியின் லியோ கழகம் யாழ். லயன்ஸ் கழக ஆதரவில் இயங்குகின்றது. இக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாள ஒரு வருடமாகின்றது.

எமது கழகத்தின் நோக்கம் சேவை செய்வதே. அதாவது வலுவிழந்தோர் மற்றும் வசதியற்றோர்களுக்கு எங்களால் முடிந்த உதவியைச் செய்வது பொது இடங்களுக்குச் சென்று எமது கழக உறுப்பினர்கள் சிரமதான வேலைகளையும் மேற்கொள்கின்றனர். அத்துடன் சர்வதேச லியோ கழகங்கள் சேவைக்கெனத் தம்மை இவர்கள் அர்ப்பணித்துள்ளனர்.

நிதி பற்றாக்குறை இருப்பதால்மேன் மேலும் சேவையை விருத்திசெய்ய எம்மால் முடியாதிருக்கிறது. இதனால் எமது கழகம் அண்மையில் ஒரு அதிர்ஷ்ட லாபச்சீட்டு விற்பனையை தொடங்கியது. இவ் அதிர்ஷ்ட லாபச் சீட்டிற்கு பல தனியார் கல்வி நிறுவனங்கள் பரிசுகளை வழங்கியுள்ளன. முதலாவது பரிசு 1000 ரூபா வென்பது குறிப்பிடத்தக்கது இவ் அதிர்ஷ்டலாப சீட்டில் இருந்து வரும் நிதியாவும் சேவைத் திட்டங்களுக்கே (Servic Projects) பயன் படுத்தப்படும். இவ் அதிர்ஷ்டலாப சீட்டு குலுக்கல் இம் மாதம் 10 திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

எமது யாழ் மத்திய கல்லூரி 'லியோ கழகம் யாழ். அரசாங்க வைத்தியசாலையின் 1, 2, 3 ஆம் வார்ட்டுக்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளதென்பதையும் பெருமையுடன் தெரிவிக்கிறோம்.

'லியோ கழகம்'
யாழ். மத்திய கல்லூரி

### மருத்துவ மாணவரின் நிலை

மருத்துவ மாணவரின் கட்டட வசதியின்மை காரணமாக இம்மாதம் 6-ம் திகதி அன்று உண்ணாவிரதமும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் மேற்கொள்ளப்பட்டது. இவ் வூர்வலம் மருத்துவ மாணவ ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மருத்துவ மாணவர்கள் 82-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இக்கட்டடத்திற் தற்காலிக கைதடிக் கட்டடத்தில் இருந்து மாற்றப்பட்டார்கள். இம்மாற்றமும் இரண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்குப் பின்னரே நிர்வாகத்தினால் உறுதியளிக்கப்பட்டுக் கீழ் மாடி மட்டும் ஒப்படைக்கப் பட்டது. அன்றிலிருந்து இன்று வரை எந்தவித துரித வேலையும் இக்கட்டிடத்தில் மேற்கொள்

மக்கள் கருத்து

ளப்படவில்லை. ஆனால் ஏற்கனவே இக்கட்டிடம் 82-ம் ஆண்டு ஜூலை மாதம் ஒப்படைக்கப்படுவதாக ஒப்பந்தகாரரால் நிர்வாகத்தினால் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது மாணவர்கள் விரிவுரை மண்டபங்கள், போதனமண்டபம், நூல்நிலையம் அற்ற நிலையில் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் 375 மாணவர்கள் பயிலும் கட்டடத்தில் தற்காலிக நூல்நிலையத்தில் 30 கதிரைகள் மட்டுமே உள்ளன. விரிவுரைகள் இல்லாத நேரத்தில் வீதிகளிலும் மதில்களிலும் உட்காரவேண்டிய நிலை உள்ளது. இப்படியான நேரத்தில் பலமுறை நிர்வாகத்திடம் மாணவர்கள் முறையிட்டுள்ளனர். இவர்கள் பல்வேறு விதமாக ஒப்பந்தக்காரரிலும், வேறு விதமாகவும் பிழை கூறிக் காலங் கடத்தத் தொடங்கியதால் வேயே மாணவர்கள் தாங்க முடியாத நிலையில் இம்மாதம் 6-ம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினையும், உண்ணாவிரதத்தினையும் மேற்கொண்டனர்.

அன்று காலை 8-00 அமைதியாக வளாகத்தினுள் ஆரம்பிக்கப்பட்டு முதல் நிகழ்ச்சியாக மாணவ ஒன்றியத் தலைவர் வேலுப்பிள்ளை விக்கினகுமார் பீடாதிபதியிடம் ஒப்பந்தக்காரரை மாணவர்கள் முன்னிலையில் சந்திக்கக் கோரினார்.

ஒப்பந்தக்காரர், பீடாதிபதி ஆர். கனகசுந்தரம், ஆலோசகர் எஸ். பி. பரமேஸ்வரன், மாணவர் ஒன்றியத் தலைவர் வே. விக்னகுமார் முன்னைய தலைவர் கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாணவர்களினுக் கட்டடம் தாமதிக்கப்பட்டது தொடர்பாகச் சில கேள்விகள் கேட்கப்பட்டது. ஒப்பந்தக்காரரிடம் உங்கள் பிழையா? அல்லது நிர்வாகத்தில் பிழையா? பணமிருந்தும் கட்டடத்தின் மற்றக் கதி பற்றி? கேள்வி கேட்கப்பட்டது. ஒப்பந்தக்காரரின் பதிலும் நிர்வாகத்தின் பதிலும் ஒன்றுக்கொன்று முரணானதாகவும், அதிருப்தியும் அளித்தது. மருத்துவ மாணவ ஒன்றியத்தின் தலைவர் ஒப்பந்தக்காரரின் பதில்களை மாணவர் முன்னிலையில் அளிக்குமாறு கேட்டதின்போது அவர் மறுத்துப் பின்னர் வற்புறுத்தலின் பேரில் மாணவர் முன்னிலையில் நிர்வாகமும் ஒப்பந்தக்காரரும் அழைக்கப்பட்டனர்.

பின்னர் ஒப்பந்தக்காரர் தான் மேலும் பிழைவிடாமல் இரண்டாவது தயாரிக்கப்பட்ட கட்டட முடிவு திகதியான 1984 ஆகஸ்டில் கட்டடம் முடித்துத் தருவதாகவும், இடையே 1-ம் மாடி 1983 டிசம்பரில்

[5-ம் பக்கம் பார்க்க]

# வெங்காயப் பயிரை புழுதாக்கும் அபாயம்

(புலோலி)
கடும்வறட்சி காரணமாக வடமராட்சிப் பகுதியில் வெங்காயப் பயிர்ச்செய்கையில் புழுவின் தாக்கம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகப் புலோலி விவசாயப் போதனாசிரியர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை எச்சரித்துள்ளார்.

தற்போது வடமராட்சிப் பகுதியில் வெங்காயம் பயிரிடும் காலம் தொடங்கிவிட்டது அத்துடன் கடும் வறட்சியும் நிலவுகின்றது. இவ்வறட்சி காரணமாக வெங்காயப் பயிரில் புழுவின் தாக்கம் ஏற்படும் அறிகுறிகள் தோன்றி இருப்பதாகவும், இதனால் விவசாயிகள் தினமும் தமது வெங்காயப் பயிர்ச்செய்கையை அவதானித்துக் கிருமிநாசினிகளைத் தெளிப்பதின் மூலம் வெங்காயச் செய்கையைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும் என்றும் விவசாயப் போதனாசிரியர் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெங்காயம் பயிரிட்டு ஐந்தாம்நாள் ஒருஅவுன்ஸ் பேருகில இரண்டு கலன்நீரில் கலந்துதெளிக்கவேண்டும் என்றும், பத்தாம் நாளில் ஒரு அவுன்ஸ் குனோறுறைபறி பொஸ்பஸ மூன்றுகலன் நீரில் கலந்து தெளிக்கவேண்டும் என்றும், 24ம் நாளில் ஒரு அவுன்ஸ் செவிகுறோனே மூன்றுகலன் நீரில்கலந்து தெளிக்கவேண்டும் என்றும், 41ம் நாளில் ஒருஅவுன்ஸ் செலிகுறோனே மூன்றுகலன் நீரில் கலந்துதெளிக்கவேண்டும் என்றும் விவசாயப் போதனாசிரியர் ஆலோசனை தெரிவித்துள்ளார். [அ]

## ரூப வாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6–00 | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| 6–01 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-30 | 'பிங் புளுமாபின்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 7–00 | செய்திமஞ்சரி (தமிழ்) |
| 7–15 | "டக்ராறி"- ஆபிரிக்கக் காட்டு வைத்தியசாலை பொன்றை மையமாகக் கொண்ட சித்திரம். |
| 8–15 | செய்திமஞ்சரி (சிங்களம்) |
| 8–30 | ஆங்கில நகைச்சுவை நிகழ்ச்சி |
| 9–00 | விவரணச்சித்திரம் (சிங்களம்) |
| 9–30 | செய்திமஞ்சரி (ஆங்கிலம்) |
| 9–45 | ஏ. பி. ஸி. — விளையாட்டுச் சித்திரம். |

# தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த முத்திரை

(யாழ்ப்பாணம்)
தமிழ்கூறும் நல்லுலகின் பேரறிஞர்களுள் ஒருவரான காலஞ்சென்ற திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக இம்மாதம் 22-ந் திகதி ஓர் தபால் முத்திரை கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் வெளியிடப்படவுள்ளது.

இவ்வாண்டு அன்னார் பிறந்த நூற்றிஐம்பதாவது ஆண்டென்பதும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் அவர் பட்டம்பெற்ற நூற்றிருபத்தைந்தாவது ஆண்டுமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உற்சவம்

[யாழ்ப்பாணம்]
காவிட்டபுரம் கொல்லங்கலட்டி விரகத்திப்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 17-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

24-ம் திகதி இரவு சப்பரத் திருவிழாவும், 25-ம் திகதி காலை இரதோற்சவமும், 26-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# இராணுவத் தளபதியின் அறிக்கை

(கொழும்பு)
இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க நாளை பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை பொன்றைச் சமர்ப்பிப்பார்.

இந்த அறிக்கையை யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய இடங்களுக்கு விஜயஞ்செய்து அப்பகுதிகளில் இடம் பெற்ற பயங்கரவாத சம்பவங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்த பின்னர் அவர் தயாரித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் வெளியிடப்படும் தகவல்கள் பாதுகாப்புச் சேவை உயர்பீடம் பயங்கரவாதிகளுக் கெதிராக புதிய அமைப்பை உருவாக்கப்பயன்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாதிகளுக்கெதிரான இப்புதிய அமைப்பின் நடவடிக்கைகள் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் உடன் அமுலுக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)

## பூரண சாரணர்

அமரர் திரு. வே. சச்சிதானந்தன் அவர்களுடன் 25 வருடங்களுக்கு மேலாக நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்ததைப் பற்றி பெருமைப்படுகிறேன். பார்வைக்கு எளியவர் பழகுவதற்கு இனியவர். சேவைக்கோ ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். தனக்கென வகுத்துக் கொண்ட ஒரு கொள்கைப் பிடிப்பில் வாழ்ந்துவந்தார். இவர் பங்குகொள்ளாத சாரணர் விழாக்கள் எதுவுமே இல்லை எனலாம் இவரது அயராத உழைப்பின் காரணமாக யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளராக உயர்ச்சி பெற்றார் சாரணியம் வளர்ச்சி பெற்றது புதியவற்றில் ஆசைப்படுவதைவிட பழையவற்றைப் பேணிப்பாது காப்பதிலேயே கண்ணும் கருத்துமாகவிருந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக அவரது கைப்பை இலங்குகிறது. வெள்ளிக்கம்பிகள் போல் அமைந்த அவரது தாடிபற்றி நாம் பல முறை விவாதித்துள்ளோம். ஆனால் தாடியில் சிலவேளை உருவ மாற்றம் ஏற்பட்டதே தவிர அதுமறையவில்லை பதிலாக அவரை அறியவைக்க அதுவே பிரதானமாக அமைந்து விட்டது.

அண்மைக் காலங்களில் நிகழ்ந்த சாரணர் விழாக்களில் பழைய பூங்கா சாரணர் விழா பாசறை நிகழ்ச்சி பொருட்காட்சி சாரணர் ஊர்வலம் கலைவிழா அனுராதபுரம் ஜம்போறி இவரது முழுமுயற்சியும் இன்றும் எம்கண்முன் திகழ்கின்றன. 'சச்சி வருகின்றார்' என்றதும் எமது மனத்தில் உடனே தோன்றுவது அரைக்காற்சட்டை யுடைய கட்டையுருவம் வெண்ணிறத் தாடி வயது சென்ற கைப்பை புன்சிரிப்பு சிகரெற் என்பவையே எதையும் தாங்கும் இதயம் என்பார்களே அது அவரிடமே இருந்தது. எவ்வகைப் பாரிய பொறுப்பையும் ஏற்று கடமை புரிந்து மகிழ்ச்சி கொள்பவர் சாரணர் பாசறைத்தீ வைபவத்தின் போது அவரது ஆட்டங்கள் பாட்டுகள் நடிப்புக்களை எவரும் மறக்கமாட்டார்.

இவரைப் பீடித்திருந்தநோய் இவருக்குச் சிறிதுநாள் முன்னறிவித்தல் கொடுத்த போதும் அதைப்பொருட்படுத்தாது அனுராதபுரப் ஜம்போறி விழாவுக்கு யாழ். மாவட்ட சாரணர்களை ஒழுங்குபடுத்தி பல்வேறு ஒழுங்குகளையும் ஓடி யாடிச் செய்து அவ்விழாவில் பங்குபற்றுவதைப் பெரும் பாக்கியமாக எண்ணியவர். ஆனாலும் அங்கேயே அவரைக் காலன் கவர்ந்து விட்டான். இவர் தன்வாழ்வில் எதை விரும்பி வாழ்ந்தாரோ அதையே ஈற்றில் பெற்றுவிட்டார். அவரது ஆன்மா சாரணர் உலகிலேயே புகுந்து மறைந்து சாந்தி பெற்றுவிட்டது.

இன்று அமரர் சச்சி இல்லத்தில் நினைவு மலர் வெளியீடும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறுகிறது.

— செ.வரதலிங்கம்
(யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்)

## ஆஸ்பத்திரி தொழிலாளருக்கான நேர்முகப் பரீட்சை

[பண்டத்தரிப்பு]
யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் சமயாசமய சாதாரணத் தொழிலாளர் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத் தொகுதி எம். பி.க்கள் சிபார்சு செய்து அனுப்பியுள்ள பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றிருப்பவர்களே மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த நேர்முகப் பரீட்சையில் ஆண் சமயாசமய சாதாரணத் தொழிலாளர்களும், பெண் சமயாசமய சாதாரணத் தொழிலாளர்களும் வெற்றிடங்களைப் பொறுத்துத் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதற்கான ஒழுங்குகளை யாழ் சுகாதார சேவைக் கண்காணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

## "ஒரு கிராமம் முன்னேற..."

(கரவெட்டி)
"ஒரு கிராமம் முன்னேற வேண்டுமானால் அக்கிராமத்திலுள்ள சிறுவர்களும் இளைஞர்களும் நல்லமுறையில் வளர்க்கப்படவேண்டியது அவசியமாகும். ஒரு கிராமத்தின் எதிர்காலம் அக்கிராமத்திலுள்ள சிறுவர்களினதும் இளைஞர்களினதும் எதிர்காலத்தை அடிப்படையாகப் பின்னணியாகக் கொண்டது"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கரவெட்டி மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினரின் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். திரு. எஸ் வல்லியசிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

யாழ். மாவட்ட சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து, கிராமோதய சபைத் தலைவர் திரு எஸ். வீரசிங்கம் உட்பட வேறுபலரும் பேசினர். [அ]

# "மண்டைதீவு குடிநீர்விநியோகத்தை தனியாரிடம் கொடாதீர்"
## அரச அதிபருக்கு மகஜர்

[மண்டைதீவு]
மண்டைதீவு குடிதண்ணீர் விநியோக ஒப்பந்தத்தை வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கொடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை மண்டைதீவுக் கிராமோதய சபையும், மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கமும் அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்துள்ளன.

மக்களின் குடிநீர் விநியோகத்தை வியாபார நோக்குடன் அணுகும் தனியாரிடம் கொடுப்பதைவிட, சேவையுணர்வுடன் மக்களுக்கு பணியாற்றத்தக்க பொதுஸ்தாபனங்களிடம் கொடுப்பதையே மக்கள்விரும்புகின்றனர் என்று அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"கடந்த வருடம் இக்கிராமத்தில் இடம்பெற்ற குடிநீர் விநியோகம் தனிநபர்களிடம் ஒப்படைக்கப்பட்டதால் அது சீராக நடைபெறவில்லை. இந்த நிலை இவ்வருடமும் ஏற்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

"கட்டிட ஒப்பந்தங்களை, வீதி ஒப்பந்தங்களை எடுப்பது போல வறட்சியில் குடிதண்ணீர் இன்றிக் கஷ்டமுறும் மக்களின் நிலையை உணராது தண்ணீர் விநியோகத்தையும் வர்த்தக ரீதியிலெடுக்கவிலதனியார் விண்ணப்பங்களை அனுப்பிக் குறைந்த மதிப்பீடுகளையும் கொடுத்து விடுகின்றனர். இதனால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் விநியோகத்தை மக்கள் தொண்டாகக் கருதிச் சேவை செய்யத்தக்க பொதுஸ்தாபனங்களிடம், அல்லது மக்களுக்கு உரித்துடைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என்று அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [வண். நிரு]

## மருத்துவ...

(4ம் பக்கத் தொடர்ச்சி)
முடித்துத்தருவதாகவும் சத்திய வாக்குறுதியளித்தார், அதன் பின்னரே மாணவர்கள் ஒப்பந்தக்காரரையும் நிர்வாகத்தினரையும் வெளியே செல்ல அனுமதித்தனர்.

எனினும் சில தாதிகள் நிர்வாகத்தினரையும் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் மாணவ பிரச்சினைகளை அறிவிப்பதற்காக ஊர்வலமாக திருநெல்வேலி தலைமை வளாகத்திற்குச் சென்று உபவேந்தரிடம் நாம் அனுபவித்துவரும் கஷ்டங்களை யிட்டு ஓர் மகஜரைக் கையளித்தனர். ஆனால் ஊர்வலம் சென்றபோது உபவேந்தர் அங்கு இல்லாமல் போகவே மாணவர்கள் அங்குள்ள பொறுப்பதிகாரியிடம் கையளித்துவிட்டு ஊர்வலமாக திரும்பவும் மருத்துவ வளாகத்திற்கு வந்து உண்ணாவிரதத்தினை தொடர்ந்தனர். சுமார் 3–30 மணியளவில்குளிர்பானம்வழங்கி உண்ணாவிரதத்தினை முடித்துக்கொண்டனர்.

வே. விக்னகுமார்
தலைவர்
மருத்துவ மாணவர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## டாக்டர் நியமிக்கக் கோரிக்கை

[பண்டத்தரிப்பு]
சங்கானை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் என். இராசகுலசிங்கம் தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலைக்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் தற்காலிகமாக பகுதித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு கடமையாற்ற சங்கானையிலிருந்து சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுத் தற்போது தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்குப் பதில் கடமையாற்ற எவரும் நியமிக்கப்படாது இந்த இடமாற்றம் போடப்பட்டுள்ளது. இந்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சங்கானை கிராமோதய சபைத் தலைவர் திரு. என். இராசா சுகாதார சேவை கண்காணிப்பாளருக்கும், வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. அமிர்தலிங்கம் நீலன் திருச்செல்வத்திற்கும் கடிதமூலம் அறிவித்துள்ளார். [அ]

## மீண்டும் தலைவராகத் தெரிவு

[மட்டுவில்]
அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சகாயநிதிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தற்போதைய தலைவரே மீண்டும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க சகாயநிதிச் சங்கத்தின வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் திரு மா இராஜலிங்கம் தலைமையில் யாழ்ப்பாணம் பாரதிபாஷா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நடைபெற்ற நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக ஆசிரியர் திரு. மா இராஜலிங்கம் மீண்டும்தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளர் ஆசிரியர் திரு த. பாலசுப்பிரமணியம், பொருளாளர் ஆசிரியர் திரு மு நல்லையா.

17 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. (க)

## பண்டத்தரிப்பு உப அலுவலகம் இடம் மாறுகிறது

[பண்டத்தரிப்பு]
தனியார் வாடகைக் கட்டிடத்தில் இதுவரை காலமும் இயங்கிவந்த யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகமும், பொதுசன நூல் நிலையமும் இன்று திங்கட்கிழமை புதிதாகக் கட்டப்பட்டுள்ள பண்டத்தரிப்பு நவீன சந்தைக் கட்டிடத்தின் மேல் மாடிக்கு இடமாற்றம்செய்யப்படுகிறது. (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் கடந்த ஆண்டில் கிடைத்த தொகை 22 கோடி 10 லட்சம் ரூபா!

(இ. கந்தசாமி)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைபெற்றுச் சென்றவர்கள் முக்கியமாக மத்திய கிழக்குச் சென்றவர்கள் கடந்த ஆண்டில்மட்டும் 22 கோடியே 10 லட்சம் ரூபாவை வெளிநாட்டுச்செலாவணியாகத் தேடித்தந்துள்ளனர்.

நாட்டுக்கு அதிக வெளிநாட்டுச்செலாவணியைச் சம்பாதித்துத் தருவதில் வெளிநாட்டில் வேலைசெய்வோர் 2-வது இடத்தை வகிக்கின்றனர்.

1979-ம் ஆண்டு முதல் 82ம் ஆண்டுவரையிலான காலப் பகுதியில் உத்தரவுபெற்ற தனியார் ஏஜன்ஸிகள் மூலம் 49,441 பேரும் தொழில் இலாகாவின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின்மூலம் 6,738 பேரும் வேலைவாய்ப்புப் பெற்று வெளிநாடு சென்றுள்ளனர். இவர்களைவிட அனுமதிப்பத்திரமில்லாத ஏஜன்சிகள் மூலமும் அநேகர் வெளிநாடு சென்றுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இல்லாது இயங்கிவரும் வேலைவாய்ப்பு ஏஜன்சிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அனுமதியின்றி வெளிநாடுகளுக்கு அனுப்புபவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுக் குற்றவாளியாகக் காணப்படுப்பட்டு 18 மாதச் சிறைத்தண்டனை அல்லது 1500 ரூபா அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படுகிறது. அத்துடன் ஏற்கனவே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அது புதுப்பிக்கப்படாதென்பதால் அதுவும் பறிமுதல் செய்யப்படும்.

81-ம் ஆண்டு மார்ச்சுக்குப் பின் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச்சென்றவர்கள் தொடர்பாக 2,406 புகார்கள் எமது தொழில் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளன. இப்புகார்களில் அனுமதிப்பத்திரமில்லாது இங்கு இயங்கும் ஏஜென்சி மூலம் அனுப்பப்பட்டோர் தொடர்பாகவே ஆகக்கூடுதலாக 65 வீதமான புகார்கள் கிடைத்துள்ளன.

மொத்த புகார்களில் 80வீதமானவை வீட்டுப்பணிப்பெண்கள் தொடர்பானவையே.

பணிப்பெண்களாக இங்கிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களுக்கு ஏனைய ஆசிய நாடுகளைச் சேர்ந்த பெண்களைவிடக் குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது என்பது முற்றிலும் தவறான கருத்தாகும்.

லைசென்ஸ் இல்லாத ஏஜன்சி மூலம் செல்பவர்களுக்கு அப்படியாகக் குறைந்த சம்பளம் வழங்கப்படலாம். உத்தியோகபூர்வமாக உரிய அனுமதியுடன் செல்லும் பணிப்பெண்களுக்கென சம்பளத்திட்ட மொன்றை தொழில் இலாகாவும் மத்திய கிழக்கு நாடுகளும் இணைந்து தயாரித்துள்ளோம். இதன்படியே உத்தியோகபூர்வமாகச்செல்லும் பணிப்பெண்களுக்கு மாதாந்தம் உணவு, விடுதி வசதி, வைத்திய வசதியுடன் 125 டாலர் சம்பளமும் வழங்கப்பட்டுவருகிறது.

78-ம் ஆண்டு மார்ச் முதல் 82 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப்பெற்றுச் சென்றவர்களின் பலவித காரணங்களினாலும் இறந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 27 லட்சத்து 14 ஆயிரத்து 794 ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு முகவர்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் மேலும் கூடுதலான வேலைவாய்ப்பைப் பெறும் நோக்குடன் ஈராக், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அபுதாபி, குவைத் ஆகிய நான்கு நாடுகளில் வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் எமது தொழில் திணைக்களத்தினால் கடந்த மாதம் முதல் திறக்கப்பட்டுள்ளன. அந்நிலையங்களில் பணிபுரிபவர்கள் அந்தந்த நாடுகளில் வேலைவாய்ப்புக்களைக் கூடுதலாகப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

---

ஆங்கில ஆசிரியர் நியமனம்:

# 13ம் திகதி வர்த்தமானியில் அறிவிப்பு வெளிவரும்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டைநீக்க சுமார் 10,000 ஆசிரியர்களை நியமிக்க கல்வி அமைச்சுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நாடுமுழுவதும், அரசினால் நடத்தப்படும் பாடசாலைகளில் சுமார் 20,000 ஆசிரியர்களுக்கு காலி இடங்களுள்ளதாக, கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியிருந்தது.

வேலையற்ற பட்டதாரிகளையும் க. பொ. த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களையும் ஆசிரியர்களாக நியமிப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்று கல்வி சேவைக் கமிட்டித் தலைவர் திரு. டி. எம். ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோருவதற்கான சகல ஏற்பாடுகளையும் கல்விச் சேவை கமிஷன் செய்துள்ளது.

அடுத்த சில மாதங்களுக்கிடையில் இந்த 10,000 ஆசிரியர்களுக்கான காலி இடங்கள் நிரப்பப்பட்டுவிடும் என்று கல்வி அமைச்சு எதிர்பார்க்கிறது.

ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் தொடர்பான விளம்பரம் இம்மாதம் 13ம் தேதி அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் இதனைத் தொடர்ந்து மற்றும் ஆசிரியர்களின் விண்ணப்பம் தொடர்பான விளம்பரங்கள் அரசாங்க வர்த்தமானியில் வெளிவரும் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

---

# தொழுநோய்பற்றி வைத்திய ஆய்வுக்கு ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

தொழுநோய் பரவியுள்ள சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்திலும் அதனை அடுத்துள்ள அயற்கிராமங்களான குடாக்கனை, பாண்டுவெட்டை, வறுத்தோலை ஆகிய கிராமங்களிலும் தொழுநோய் பற்றிய விரிந்த அளவிலான வைத்திய ஆய்வு ஒன்று இம்மாதம் 13ம் திகதி நடாத்தப்படவுள்ளது

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி என். சிவராசா தலைமையில் ஏழு டாக்டர்கள் இந்த 'ஆய்வை இங்கு மேற்கொள்ளுவார்கள்.

இதற்கான ஒழுங்குகளை சுழிபுரம் சுகாதார அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது. (க)

---

## கேகாலை வியாபாரியிடம் கிளிநொச்சியில் கொள்ளை!

(வவுனியா)

நேற்று விடியற்காலை 4-30 மணியளவில் கிளிநொச்சி சந்தையில் வைத்து வியாபாரி ஒருவரிடம் 20 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கேகாலையிலிருந்து கிளிநொச்சி சந்தையில் சாமான்கள் வாங்குவதற்காக வந்திருந்த வியாபாரி ஒருவரிடமே கத்திமுனையில் இக் கொள்ளை நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி கிளிநொச்சிப் பொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டனர்.

---

## ஒய்வுபெறுகிறார்

(சாவகச்சேரி)

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் பிரதம காசாளர் திரு. இ. சிதம்பரம்பிள்ளை தமது 35 வருடசேவையுடன் இளைப்பாறுகிறார்.

ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தில் தமது பணியை ஆரம்பித்தார்.

இவரது சேவையைப் பாராட்டி இலங்கை வங்கித் தலைமை முகாமை அலுவலகம் இவரை அழைத்துக் கௌரவித்தது (அ)

---

## நாயன்மார் திருவுருவ பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

திருநாவுக்கரசு நாயனார் குருபூஜையை முன்னிட்டு, தொழிலதிபர் திரு. க. கனகராசா நாயன்மார் நால்வரின் திருவுருவங்களையும், தேவாரங்களையும் தாங்கிய பிரசுரம் ஒன்றை நேற்றுமுன்தினம் இலவசமாக வெளியிட்டுள்ளார். (மா)

---

## தினக்குடிகாரன் தற்கொலை

(மன்னார்)

தினமும் மது அருந்திவிட்டு மனைவியுடன் சச்சரவில் ஈடுபட்டுவந்த கணவன் இறுதி

(7ம் பக்கம் பார்க்க)

---

# உல்லாசப்பயணிகள் வருகை கலாசாரத்தைப் பாதிக்கிறதா?

(கொழும்பு)

இலங்கையில் உல்லாசப் பயணிகள் வருகையினால் உள்நாட்டு சமூக கலாசார பாரம்பரியங்களுக்கு கேடுகள் ஏற்படுகின்றதா என்பது பற்றி ஆராயவிருக்கும் உபகுழு பொது மக்களிடமிருந்தும் கருத்துக்களை முக்கியமாக கேட்டறியவுள்ளது.

ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்த திஸ்ஸ டி அல்விஸினால் நியமிக்கப்பட்ட இவ் உபகுழு இலங்கையில் உல்லாசப் பிரயாணிகள் அதிகமாக தங்கும் பகுதிகளில் நடைபெறுவதாக சொல்லப்படும் போதைவஸ்து பாவிப்பு, நிர்வாணமாக திரிதல், பாலியல் குற்றங்கள் போன்ற நடவடிக்கைகள் பற்றியே இக்குழு முக்கியமான பல விபரங்களை ஆராயவுள்ளது.

பொதுஸ்தாபனங்களும் மற்றும் தனிப்பட்டவர்களும் தமது கருத்துக்களைத் தெரிவிக்க முடியும். முதலில் கருத்துக்கள் எழுத்து மூலமே அறிவிக்க வேண்டும். இதற்கான தகவல்களைக் கொடுக்க விரும்புவோர் குழுவின் செயலாளருக்கு இம்மாதம் 25ம் திகதிக்கு முன்னர் தெரிவிக்க வேண்டும். பின்னர் இவர்களிடம் மேலதிக விபரங்களை உபகுழு விசாரிக்கும் என்றும், இவர்களின் பெயர்பத்திரமாக பாதுகாக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (சூ)

---

## புங்குடுதீவு கி.உ.சபை தலைவர்

(இருபிட்டி)

புங்குடுதீவு மேற்குக் கிராமோதய சபையின் புதிய தலைவராக திரு. .., தேவன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் கே. தவராஜா என்ற ஆசிரியர் இக் கிராமோதய சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இத்தேர்தலில் இரு வேட்பாளரும் சமவாக்குகள் கிடைத்தன, இதனால் சீட்டிழுப்பின்மூலம் திரு தவராஜா தலைவர் பதவியைப் பெற்றார். இதற்கு ஆட்சேபங்கள் கிளம்பியதையடுத்துத் தேர்தல் செல்லுபடியற்றதென அரச அதிபர் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக நடைபெற்ற தேர்தலில் திரு. தேவன் தலைவராக நியமிக்கப்பட்டார். (அ)

---

## ரூபா 21,000 உதவி

(மட்டுவில்)

சர்வலோக தூதர்சன நிறுவனம் வறிய குடும்பங்களின் அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவு முகமாக, மிருசுவில் செற்பேலி கிராமஅபிவிருத்திச் சங்கத்திற்கு 21.000 ரூபாவை கொடுத்துதவியுள்ளது.

இந்த நிதியை மூன்று கட்டங்களாகக் கொடுத்து உதவியுள்ளது. இதில் முதலாவது கட்டத்தில் ஆடுகளை வறிய குடும்பங்களுக்குக் கொடுத்து உதவியது. இரண்டாவது கட்டமாக கிராமத்திலுள்ள அசிக்குக் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களைக் கொடுத்து உதவியது மூன்றாவது கட்டமாக பாலர்பாடசாலையையும் அமைத்து உதவியுள்ளது.

தென்மராட்சிப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திரு. எஸ. ஜீவரத்தினம், திரு என். ஆர். பரராஜசேகரம் ஆகியோரின் நடவடிக்கையைத் தொடர்ந்தே சர்வலோக தரிதரிசன வடபிராந்திய திட்டமிடல் அதிகாரி மூலம் இத் தொகை வழங்கப்பட்டது.

---



யாழ். நகரில் தமிழர் திடீர் நிதி நிறுவனம் அண்மையில் திறக்கப்பட்டபோது, விழாவில் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் உரையாற்றுவதையும், அருகே முல்லைத்தீவு மாவட்ட உதவி காணி ஆணையாளர் திரு. ம. அமிர்தலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## தினக்குடிகாரர். .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

மன்னார்-சாவற்காடு பகுதியைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான பத்மநாதன் (வயது 36) என்பவரே கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டவராவர்.

இவரது மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி ஜனாப் எம். எம். எம். ஆலம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

# திருநெல்வேலி இந்து வாலிபர்சங்கம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்துக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடந்த கிரிக்கெட் போட்டியில் திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கம் வெற்றி ஈட்டியது.

ஒரு இன்னிங்ஸ் மட்டுமே இரு அணிகளாலும் விளையாட முடிந்தது. எனவே அந்த ஒரு இன்னிங்ஸிலுள் இரு அணிகளும் இருந்த நிலைகொண்டே ஆட்டத்தின்முடிவு தீர்மானிக்கப்பட்டது.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட் நட்டத்துக்கு 306 ஓட்டங்களைப்பெற்றது. யாழ். இந்துக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க அணியில் ஆர்.மகிந்தா 75 ஓட்டங்களையும், பீ. இந்திரஜீ. ச. திருக்குமார் ஆகியோர் முறையே 59, 50 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். இந்துக் கல்லூரி சார்பில் ஆர். திலீபன் 69 ஓட்டங்களைப் பெற்றார். (இ)

# மன்னார் செய்திகள்

— நமது நிருபர் —

(மன்னார்)

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்றத்தினால் தையல் பயிற்சி பெறுவதற்காக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5 யுவதிகள் திருமலை நிலாவெளி தையல் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### சாமதான நீதவானாக நியமிக்க

பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர்களை சமாதான நீதவான்களாக நியமிப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும் என்று மன்னார் மாவட்ட பதிவாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### வேலைகள் ஸ்தம்பிதம்

மன்னார் மக்கள் வங்கிக்கிளையில் நடந்த 4 மாதங்களாக ஆங்கில தட்டெழுத்தாளர் பதவி காலியாக இருப்பதலால் வங்கிக் கிளையின் பல முக்கிய வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளது இதனால் வங்கிக்கடன்கள் வழங்குவதில் கால தாமதம் மேற்பட்டு வருகிறது.

### ஆலோசனை கூட்டம்

அடம்பன் மாவட்ட வைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை அடம்பன் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் மன்னார் எம். பி. திரு. பி.எஸ். சூசைதாசன் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு பி. எம். செபமாலை மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. வி. கைலாசபிள்ளை மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே, கோபாலரத்ணம் வவுனியா சுகாதார அத்தியட்சகர் திரு. என். கனகசபை அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகையா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

### மண்டபம் அமைக்கப்படும்

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து கப்பல் மார்க்கமாகத் தாயகம் செல்லும் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கு வசதியாக தலைமன்னார் துறைமுகத்தில் மண்டபம் ஒன்று அமைக்கப்படும் இம் மண்டபம் ஒருலட்சம் ரூபா செலவில் தொழில் திணைக்களத்தினால் அமைக்கப்படவிருக்கிறது தலைமன்னார் துறைமுகத்தில் தற்போதுள்ள இரு மண்டபங்களில் ஒரு மண்டபத்தை உல்லாசப் பயணிகளும் மற்றைய மண்டபத்தை தாயகம் செல்லும் பிரயாணிகளும் பயன்படுத்தி வருகின்றனர் தாயகம் செல்லும் பிரயாணிகள் பயன்படுத்தும் மண்டபத்தில் போதிய இடவசதியில்லாததாலேயே புதிய மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

### சாம்பியனாக தெரிவு

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட 4 பேர் கொண்டாரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொண்டைச்சி ஹமீதியா விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது மன்னார் வேப்பங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் வேப்பங்குளம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இக்கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 40 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டன.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 26-ம் திகதி திங்கட்கிழமை

(9-5-83)

மேடம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை, காதலர்கள் எண்ணங்கள் கைகூடும், இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும், எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

இடபம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும், உதவிசெய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள், அரசாங்கத்திற்கும் இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ளவேண்டாம்.

மிதுனம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும், சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம், புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றி கிடைக்கும்.

கடகம்: தெளிந்த மனம் தெய்வத்தை தேடிவது கிடைக்கும், அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு, இறைநம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி நிலவும்.

சிங்கம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும், தொழில் துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம், நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படலாம்.

கன்னி: களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும், புத்திர வழியால் மகிழ்ச்சியுண்டு.

துலாம்: சிரித்துப் பேசுபவர்கள் இன்று சீறி விழுவார்கள், உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும், சிலருக்கு பதவி உயர்வும் தடைப்படலாம்.

விருச்சிகம்: பிதா வழியில் இருந்து மகிழ்ச்சிகரமானசெய்திக்கு இடமுண்டு, தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும், புண்ணிய காரியங்களை மனம் நாடும், நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

தனு: வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள், தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும், எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

மகரம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், சுற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும், இடமாற்றத்துக்கான வழிகோலப்படுவதால் நன்மை உண்டு.

கும்பம்: திடீர்த் தாக்குதல் உங்களைத் திகைக்கவைக்கலாம், நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கும், வெளியூர்ப்பயணம் சிலருக்கு வேதனையைத் தரலாம், பிணிக்கு இடம்கொடாது நடக்கவும்.

மீனம்: அலைமோதும் எண்ணங்கள் உங்கள் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் அன்னியர்களின் வேண்டாத தலையீடு பொறுமையைச் சோதிக்கலாம், கிரய விஷயம் உண்டு, இரவுப் பயணத்தைத் தவிர்க்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## புதிய நிர்வாகிகள்

[கொண்டாவில்]

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் தலைவர் திரு. இ. சபாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிந்தெடுக்கப்பட்டனர். தலைவர் திரு. இ. சபாலிங்கம், உபதலைவர்கள்: திரு. அ. பஞ்சலிங்கம் (அதிபர்), திரு. ஆர், மகேந்திரன். திரு. சி. கே. கந்தசாமி, திருமதி சு. சுப்பிரமணியம் (உபஅதிபர்), திரு க. மாணிக்கவாசகர், திரு ச பிரேம்குமார். திரு. எஸ். ஏ.ரி வடிவேலு.

இணைச்செயலாளர்கள்: திரு. என். சிவானந்தராசா, திருமதி சு இராமநாதன், இணைப் பொருளாளர்கள் திரு. எஸ். வரதராஜேஸ்வரமுதலி திருமதி சண்முகப்பிள்ளை. பதினொருபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (க)

## ஆயுள்வேத..

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ளர்கள் வைத்தியசாலைக்கு வருகைதந்து வெறுங்கையுடன் திரும்பிச் செல்கின்றனர்.

தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வருகைதந்து மருந்து பெற்று வந்த இவ் வைத்தியசாலையில் கடந்தஒரு மாதத்திற்கு மேலாக மருந்தில்லாமலுள்ளது.

ஆயுள்வேதக் கூட்டுஸ்தாபனம் வழங்கும் மருந்துவகைகளே நோயாளருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## காரைநகர் வடக்கு கி.உ.சபைத்தலைவர்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் வடக்கு கிராமோதய சபையின் புதிய தலைவர் தெரிவு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் சுற்றுலா பணிமனையில் நடைபெற்ற போது திரு. கார்த்திகேசு சோமசுந்தரம் மீண்டும் தலைவராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். விசேட சேவை அலுவலர் திரு. ச. கனகசபாபதி தலைமையில் இத்தெரிவு நடைபெற்றது.

காரைநகர் வடக்கு த. வி. கூட்டணிச் செயலாளராகவும். காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நீலிப்பந்தனைக் கிளைச் சங்கத்தின் தலைவராகவும் மற்றும் பல்வேறு பொது நல சங்கங்களின் முக்கிய உறுப்பினராகவும் இவர் இருந்துவருகின்றார்.

## ஞானவீரசங்க ச. ச. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கொண்டாவில் ஞானவீர சங்க சனசமூக நிலையத்தின் 39 வது ஆண்டுவிழா நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. மு. இராசையா. தலைவர்: திரு த. சுப்பிரமணியம், உப- தலைவர்: செ. தர்மகுலசிங்கம், செயலாளர் திரு.ச.சத்தியமூர்த்தி,உப செயலாளர்: திரு. மு சிவஞானம், தனாதிகாரி; திரு. மு. இராஜலிங்கம், உபதனாதிகாரி: திரு வை. அற்புதலிங்கம், நிர்வாக உறுப்பினர்கள் 13 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எல்லாமே
பணத்துக்குத்தாண்டா

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 4-15. 7-00
சனி. ஞாயிறு 1-30
லவகுசா

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை

லிடோ (யாழ்.நகர்)
10-30, 2-15, 4-45, 7-15, 9-30.
Mc Arther

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சரத் பாபு, சுஹாசினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர். சரோஜாதேவி திருடாதே (புதிய பிரதி)
20-5-83 முதல் சகலகலா வல்லவன்

வெளியூர் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க திரைப்படக் கூட்டுத்தாபன அனுமதியுடன் இன்னும் சில தினங்கள் மட்டும்
'சங்கிலி' நீடிக்கப்பட்டிருக்கின்றது
றீகல் 4-வது ஹவுஸ் புல் வாரம்
(யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
• சிவாஜி, பிரபு, சுந்தரராஜன், ஸ்ரீப்பிரியா, சுமித்ரா, மனோரமா
சங்கிலி
(ஈஸ்ட்மென் கலர்)

வின்ஸர் தினசரி இன்னும் சில தினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
அடுத்த வெளியீடு IDEAL MARRIAGE

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன் - ஜெய்சங்கர் - ஸ்ரீதேவி
நடித்த
வாழ்வே மாயம்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி தினசரி 5 காட்சிகள்
(யாழ். நகர்) 7 — 12 மட்டும்
Starring the Big Four:
JIM BROWN—FRED WILLIAMSON—JIM KELLY
—RICHARD ROUND TREE in
"ONE DOWN TWO TO GO"
Action Packed—Color—Adults Only
13-5-83—சிவாஜி—"தியாகம்"—கலர்

# வேலைநீக்கத்தின் எதிரொலி:

# தொழிலாளர் போராட்டம்!

## 3-ம் கட்டத்தொழிலாளர் முஸ்தீபு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து ஆலை மூன்றாம்கட்ட தொழிலாளர் வேலைநீக்கம் தொடர்பாக தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராட்டம் நடத்த முஸ்தீபு செய்துவருவதாக அறியப்படுகிறது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையின் 3-ம் கட்டப் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்தவர்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சார்பில் வேலை செய்தவர்களுமாக சுமார் 1000 பேர்வரை வேலைநீக்கத்திற்கு உட்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திடீரென எவ்வித காரணமுமின்றி இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து தொழிலாளர்கள் போராட்டம் நடத்த முஸ்தீபு செய்து வருவதாகவும் இது குறித்து தொழிலாளர்கள் கூடி ஆராய்ந்து முடிவெடுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

தொழிலாளர்களை திடீரென வேலைநீக்கம் செய்யக் கூடாது. ஒருமாத முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும். ஒரு வருடம் வேலைசெய்தவர்களுக்கு தொடர்ச்சியாக வேலை நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும். தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கும்போது 3மாத சம்பளம் வழங்கப்படவேண்டும். தொழிலாளர்களை பாரபட்சமின்றி நடத்தவேண்டும். அதிகாரிகளின் அரவணைப்பிலுள்ளவர்களுக்கு ஒரு நீதியும், மற்றையோருக்கு ஒரு நீதியும் என்ற நிலை இருக்கக்கூடாது. தொழிற்சாலையில் விபத்தில் சிக்கி மரணமான, கை,கால் ஊனமான சகலருக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும்.

இதுபோன்ற கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்துள்ளனர். இக்கோரிக்கைகள் குறித்த சுவரொட்டிகளும் தொழிற்சாலை முன்றலில் ஒட்டப்பட்டுள்ளன.

## மின்சார விநியோகத்தில் தடை இல்லை!

(கொழும்பு)

நாட்டில் நிலவும் நீண்டகால வறட்சியினால் பாதிப்பு ஏற்பட்டுள்ள போதும், பாவனையாளர்களுக்கு மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுமென்றும் இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

காசல்றி, மாவுசாகலை நீர்த்தேக்கங்களில் சிறிதளவு மழை பெய்துள்ளது. அனல் மின் உற்பத்தி இயந்திரத்தின் மூலமே தொடர்ந்து பாவனையாளர்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுவதாக மின்சார சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இம்மாத முடிவுக்குள் மழை பெய்தால் மின்சார விநியோகம் குறைந்தசெலவில் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் கூறினார். (வெ)

O/L Dec. 83

ENGLISH with GRAMMAR

(விசேட திறமைச்சித்திகட்கு உத்தரவாதம்)

★ சிறந்த முறையிலான போதனை
★ இலவச வினாவிடை, விளக்கக்குறிப்புகள்
★ மிகக் குறைந்த கட்டணம்

யாழ் பிரபல ஆசிரியர்
K. S N CUMARAN
ஆரம்பம்: 10 - 5 - 83 மாலை 4-00
விபரங்கட்கு
Darmananda InstituteS
250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா முன்பாக) Tele: 24011

ஹோம் பிஞன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிஞன்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிஞன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிஞன்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பிஞன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3

## இப்படியும் நடக்கிறது

அது ஒரு ஆடம்பரமான திருமண வைபவம்.

சாப்பாடு என்ன தெரியுமா?

ஐம்பத்தைந்து ஆடுகள். சுமார் ஆயிரம் கோழிகள்! அது மட்டுமல்ல! நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த முக்கிய வர்த்தகப்பிரமுகர்களுக்காக குடிநீர் முந்நூறு மைல் தூரத்திலிருந்து 'பவுசர்' மூலம் விசேடமாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

எங்கே எப்போது என்று குழம்பாதீர்கள்! யாழ்ப்பாணத்தில் இரு வர்த்தகப் பிரமுகர்களின் திருமண வைபவத்தில் தான் மேற்படி 'புரியாணி' மணந்தது!

அடிக்குறிப்பு: குடிநீர் கொண்டுவரப்பட்டது கொழும்பிலிருந்து.

'ஊடுருவி'

## வங்கியில் வைத்து ரூ. 2 லட்சத்து 87 ஆயிரம் பணப்பை மாயம்!

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வங்கிக்கிளையொன்றில் வைத்து பெருந்தொகை ரொக்கப் பணத்தையும் காசோலையையும் ஒருவர் இழந்துள்ளார்.

வங்கி அலுவல் காரணமாக அங்கு சென்ற இவரது மண்நிற தோல்ப்பையுடன் பணமும் காசோலையும் மாயமாய் மறைந்துவிட்டது. இதன்பெறுமதி இரண்டு லட்சத்து 87ஆயிரம் ரூபாவாம்.

யாழ். வின்சர் தியேட்டர் ஊழியரான டொனல் ராஜன் என்பவரே இவ்வாறுபணத்தை இழந்தவராவார். வங்கியில் இவரது நடமாட்டத்தை அவதானித்துவந்த திருடர்களே சந்தர்ப்பம் பார்த்து இவரது பணப்பையை அபேஸ்செய்திருக்கவேண்டுமென்று நம்பப்படுகிறது.

## ஐக்கியம்.:.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படுத்தப்போகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டபூர்வமாக சில உரிமைகளை அளிக்கப்போகிறது என்பதனால்தான் தேர்தலை வரவேற்றோம். இதனை ஒரு கருவியாக கொண்டுஎமது இலட்சியத்தை அடையலாம் என்பதே எமது நம்பிக்கை'' என்று திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

## நேற்றிரவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காற்றியதைத் தொடர்ந்து யாழ். எம். பி, திரு. வெ. யோகேஸ்வரன் உணர்ச்சியாக பேசினார். கூட்டம் எட்டுமுப்பது மணியளவில் முடிவடைந்தது.

## ★ காங்கேசன்துறையில் வீடுவீடாக நடந்த புற்றுநோய் ஆய்வு

### 12,300 பேர் பரிசோதனை; 280 பேருக்குவாய்புற்றுநோய் அறிகுறி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடத்தப்பட்ட புற்றுநோய் ஆய்வில், வாய்புற்றுநோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டவர்கள் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் வாய் புற்றுநோய் பரிசோதனைக்குட்படுத்தும்திட்டத்தின் கீழ் வீடுவீடாகச் சென்று இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலக சுகாதாரநிறுவனமும், சுகாதாரப்பகுதியினரும் இணைந்து நடத்தும் இந்த ஆய்வில காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த எட்டுசுகாதார பரிசோதகர்களும், 27மருத்துவமாதர்களும், சுகாதாரதொண்டர்களின் உதவியுடன் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை 20 வயதிற்குமேற்பட்ட 12ஆயிரத்து 300பேர் மேற்படி பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். இவர்களில் 280பேருக்குவாய்புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்டதால் இவர்களை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் பரிசோதனை செய்வித்துக்கொள்ளுமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இவர்களில் 103பேர் மட்டுமே தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில்பரிசோதனைசெய்துகொண்டுள்ளதாகவும், ஏனையோர் இப்பரிசோதனையை செய்து கொள்ளவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. பரிசோதனை செய்துகொண்டவர்களில் நால்வருக்கு வாய் புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களது நன்மைக்காக மேற்கொள்ளப்படும் இலவசமான மேற்படி புற்றுநோய் ஆய்வுக்கு பொதுமக்களது ஒத்துழைப்புகுறைவாயிருப்பதால் அதனை சிறப்பாக செய்ய முடியவில்லை என்றும், பொதுமக்கள் மிகுந்த ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனவும் சுகாதாரப்பகுதி அதிகாரிகள் கோருகின்றனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா வள்ளியம்மை

வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் ஆ. சி. தில்லையம்பலத்தின் சகோதரியும் கச்சேரியடியைச் சேர்ந்தவருமான திருமதிகந்தையா வள்ளியம்மை 8-5-1983 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும்திருமதி அன்னலட்சுமி ரத்தினம், திரு K. கணேசையா, திரு K யோகரத்தினம் (C T. B Jaffna Depot) ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. N E ரத்தினம், திருமதி க நவமணி, திருமதி யோ. லலிதா (விற்பனைத் திணைக்களம் நல்லூர்) ஆகியோரின் அருமை மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 9-5-83 பிற்பகல் நான்கு மணிக்கு இலக்கம் 6, கட்டுவத்தோர் ஒழுங்கை சண்டிக்குளியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். தகவல்:

7171 K யோகரத்தினம் (செல்வம்)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmder B. 100236/81. Eelanadu-P O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126